IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.674/2010
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.20p.m.

பி.வா.சா. 1 சாட்சி பிச்சைமணி த.பெ.சிவன்காளைத்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 05.03.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். சொத்து சம்மந்தமாக வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

2.வழக்குச் சொத்தை பொறுத்து வாதியின் அனுபவத்தை நான் இடைஞ்சல் செய்யக்கூடாது என்ற பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வழக்குச் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்குச் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் சின்னசிவணாண்டிக்கு பாத்தியம் ஆகும். மேற்படி சொத்து சின்னசிவணாண்டிக்கு பாத்தியப்பட்டது இல்லை என்பது தெரிந்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. சர்வே எண் 13/2N1 வாதிகள் பெயரில் பட்டா எண் 534 ஆக உள்ளது என்றால் தவறாக உள்ளது. மேற்படி பட்டாவானது 1979முதல் உள்ளது என்றால் சரியல்ல. UDRகாலத்திலும் வழக்குச் சொத்து வாதிகள் பெயரில்தான் பட்டா ஏற்பட்டது என்றாலும், அந்த பட்டாவின் எண் 649

என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 1ஏக்கர் 94 செண்டு ஆகும்.

4. வழக்குச் சொத்தின் விஸ்தீரணம் 54 செண்டு என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1,2 வாதிகள்தான் வழக்குச் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, நான்தான் அனுபவம் செய்து வருகிறேன்.

( வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

முடிவடையும் நேரம்:12.30p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.05 16:24:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.